ராஜாங்கன பிரதேச சபை
அனுராதபுரம் மாவட்டம்

-------------------------------

1. **நிதிக் கூற்றுக்கள்**

1.1 **நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஜுலை 09 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டம்பர் 04 ஆம் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ராஜாங்கன பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் ஆணைப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 3,577,920 பெறுமதியான தொகை நிதிக்கூற்றுகளில் ரூபா 3,296,906 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 281,014 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய வருமானம் சரியாகக் கண்டறியப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ஆணைப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 2,920,420 பெறுமதியான தொகையாக இருந்த போதிலும் அது நிதிக்கூற்றுகளில் ரூபா 2,637,086 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 283,334 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தைக் கண்டறிந்து கணக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | ரூபா 1,947,000 பெறுமதியான மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டில்கள் நிதிக்கூற்றுகளில் அலுவலக உபகரணங்களாக காண்பிக்கப்பட்டிருந்தன. | உரிய பிரிவின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி நிர்மாணக் கடன்கொடுத்தோர் நிதிக் கூற்றுகளுக்கு ஏற்ப ரூபா 18,086,083 தொகையாக இருந்த போதிலும் கடனகொடுத்தோர் ஆவணங்களுக்கு ஏற்ப ரூபா 18,220,350 தொகையாக காணப்பட்டதால் ரூபா 134,267 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளில் வேறுபாடுகளை இணக்கஞ் செய்து கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். மீளாய்வாண்டின் நிர்மாணக் கடன்கொடுத்தோர் உப அட்டவணைகளின் மீதிக்கு ரூபா 134,267 தொகை சேர்க்கப்படாததால் இந்த வேறுபாடு தோன்றியுள்ளது. |

**(இ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி 03 ஆண்டுகளுக்கும் மேலாக கிடைக்க வேண்டிய 06 கணக்குகளின் மீதிகளான ரூபா 2,341,177 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருங்காலத்தில் மதிப்புக்குரிய ஆளுனரின் / உரிய அமைச்சரின் அனுமதியைப் பெற்று நீக்க நடவடிக்கை எடுத்து தீர்க்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி 03 ஆண்டுகளுக்கும் மேலாக செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணமான ரூபா 1,248,788 செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 03 ஆண்டுகளுக்கும் மேலாக செலுத்தப்பட வேண்டிய முத்திரைக் கட்டண மீதிகள் ரூபா 1,248,788 பெறுமதியான தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்துவதற்கான 186-2019 ஆம் இலக்க தீர்மானத்திற்கு ஏற்ப எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் சபை நிதிக்கு பணம் கிடைப்பதற்கு ஏற்ப ஒரு பகுதியை செலுத்தித் தீர்க்க குறித்துக் கொண்டிருக்கிறேன். |

(ஈ) **கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 249,793,087 பெறுமதியான 06 கணக்குகளுக்கு உரிய ஏற்றுக் கொள்ளத்தக்க சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் உப பிரிவு | நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் கையேடு | | | |
| | விதி 5.11 | சபைக்குரிய கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்கள் தொடர்பாக பாதுகாப்பு காப்புறுதியைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | பிரதேச சபை விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2020 ஆம் ஆண்டில் இருந்து கொண்டு செல்லப்படும் பணத்துக்காக பாதுகாப்புக் காப்புறுதியைப் பெற நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) 2006 நவம்பர் 14 ஆம் திகதிய PL 53/01/07 ஆம் இலக்க உள்ளூராட்சி மற்றும் சீர்திருத்த அமைச்சின் சுற்றறிக்கை ------------------------ இலக்கம் 06 இல் 2.2 (iii) | தொடர்ச்சியாக செயற்படுத்தப்படக் கூடிய வீதி பராமரிப்பு வழிமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வீதிகள் பராமரிப்பு வழிமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். எதிர் காலத்தில் தொடர்ச்சியாக செயற்படுத்தப்படக் கூடிய வீதி பராமரிப்பு வழிமுறையொன்றைப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கிறேன். |
| | சபைக்குரிய பாதைகளில் கொண்டு செல்லப்படக் கூடிய அதிகபட்ச எடை காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,352,148 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 8,296,376 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,070,000 | 1,675,500 | 1,675,500 | - | 2,409,400 | 1,558,592 | 1,558,592 | - |
| வாடகை | 7,804,934 | 7,290,355 | 7,288,105 | 123,000 | 3,648,200 | 7,272,191 | 7,190,991 | 120,750 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 249,100 | 328,700 | 328,700 | 220,425 | 966,100 | 144,480 | 144,480 | 220,425 |
| ஏனைய வருமானம் | 20,851,061 | 21,072,720 | 20,357,443 | 4,966,586 | 26,245,874 | 20,268,346 | 31,831,684 | 4,251,309 |
| மொத்தம் | 29,975,095 | 30,367,275 | 29,649,748 | 5,310,011 | 33,269,574 | 29,243,609 | 40,725,747 | 4,592,484 |

### 2.2.2 வீத வரிகள் மற்றும் வரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 (i) பிரிவின் பிரகாரம் சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளைக் கண்டறிந்து வீதவரிகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்திற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். தற்போது வீத வரிகளையும் வரிகளையும் விதிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 123,000 பெறுமதியான தொகையாக காணப்பட்டது. | நிலுவை வாடகை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். ரூபா 123,000 தொகை பெறுமதியான கடை வாடகைத் தொகையில் ரூபா 107,500 பெறுமதியான தொகை தற்போது அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய நிலுவையான ரூபா 15,500 பெறுமதியான தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய நிலுவை அனுமதிப்பத்திர கட்டண வருமானம் ரூபா 220,425 பெறுமதியான தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | உரிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். அறவிடப்படாமல் இருக்கும் ரூபா 220,425 தொகை பெறுமதியான தனித்த மீதியை அனுமதிப்பத்திர ஆவணங்களில் இனங்காண இயலாதுள்ளமையால் வருங்காலத்தில் நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,637,086 முத்திரைக் கட்டணம் ரூபா 2,329,500 ஆக காணப்பட்டது. | உரிய நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண மீதிகளில் 2019 ஆம் ஆண்டுக்கு உரிய கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண மீதி தற்போது முழுமையாகக் கிடைத்துள்ளது. முத்திரைக் கட்டண மீதியை அறவிட தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டும் எனினும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை உரிய விடயங்கள் தொடர்பாக துணை விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் உரிய பிரிவின் பிரகாரம் துணை விதிகளை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 10 உப விதிகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய துணை விதிகளை எதிர்காலத்தில் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி 2030 நிரல் தொடர்பாக அறிந்திருந்ததுடன் பிரகாரம் அதன் பிரகாரம் நோக்கங்களை தாபித்து நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் நோக்கங்களை தாபித்து நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிக்க வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். |

3.2 **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் செலுத்தப்படாதிருந்த ஓய்வூதியம் ரூபா 188,856 தொகையாக இருந்தது. | ஓய்வூதியத் திணைக்களத்துக்கு செலுத்தப்பட வேண்டும். | செலுத்தப்படாத ஓய்வூதிய மீதியான ரூபா 188,856 தொகை பட்டியல் கிடைத்ததன் பிறகு உப ஆவணங்களை சமர்ப்பிக்க குறிப்பெடுத்திருக்கிறேன். |

3.3 **மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இடம் மாற்றப்பட்டுச் சென்ற ஊழியர்கள் 10 பேரிடமிருந்தும், பணி இடை நிறுத்தப்பட்ட ஊழியர்கள் 04 பேரிடமிருந்தும் ரூபா 613,137 கடன் தொகை பல ஆண்டுகளாக அறவிடப்பட வேண்டியிருந்தது. | உரிய கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இட மாற்றம் சென்றவர்களிடமிருந்து மாதாந்தம் கடன் அறவிடப்படுவதோடு ஏனையவர்களின் மீதி பல ஆண்டுகளாகத் திகழ்ந்து வருவதோடு சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு உரிய அமைச்சரினூடாக அத் தொகையை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.4 **சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் ஜனவரி 01 ஆம் திகதி ரூபா 137,171,454 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்கள் சபையினால் நியமிக்கப்பட்டிருந்த செயற்குழுவின் மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 321,721,100 பெறுமதியான தொகையாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் 235 சதவீத்தினால் அதிகரித்திருந்தன. | சொத்துக்களை மதிப்பிடுவது தொடர்பான அறிவுடைய உத்தியோகத்தர்களைக் கொண்ட செயற்குழுவொன்றை நியமித்து மதிப்பிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பிடுவது தாமதமானமையால் செயற்குழுவொன்றை நியமித்து சொத்துக்கள் மதிப்பிடப்பட்டுள்ளன. |

3.5 **சொத்துக்கள் முகாமைத்துவம்**

3.5.1 **கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் சபையினால் பயன்படுத்தப்படும் ரூபா 18,849,179 பெறுமதியான 02 வாகனங்களை கையேற்க | இந்த வாகனங்களின் உரிமையைக் கையேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த இரண்டு வாகனங்களின் உரிமையைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

3.5.2 **விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆண்டில் சபைக்குக் கிடைக்கப் பெற்ற ரூபா 2,655,318 பெறுமதியான போடோன் ரக ட்ரக்டர் வண்டி சில வருடங்களாக உபயோகிக்கப்படவில்லை. | பயன்படுத்தக் கூடிய நிலைமையில் காணப்பட்டால் பழுதுபார்த்து உபயோகப்படுத்த வேண்டும். | உதிரிப் பாகங்கள் இல்லாத காரணத்தால் இவ்வளவு காலமும் பழுது பார்க்க முடியவில்லை. 2020 ஆம் ஆண்டில் பழுது பார்த்து பாவனைக்கு எடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கெப் ரக வாகனம் செயலற்றுக் காணப்பட்டதோடு இந்த வாகனத்தைப் பழுது பார்த்து பாவனைக்கு எடுக்கவோ அல்லது அகற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாவனைக்கு எடுக்க முடியாவிட்டால் அகற்றப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் அகற்ற எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| (இ) | ரூபா 370,000 தொகை பெறுமதியான ட்ரக்டர் டேலர் மற்றும் ரூபா 270,000 தொகை பெறுமதியான தண்ணீர் பவுஸர் செயலற்ற நிலையில் காணப்பட்டது. | பாவனைக்கு எடுக்க முடியாவிட்டால் அகற்றப்பட வேண்டும். | முறையான அனுமதியைப் பெற்று 2020 ஆம் ஆண்டில் அகற்ற எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

**04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வடமத்திய மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 2015 மார்ச் 18 ஆம் திகதிய 2015/04 இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்திக்கு இணங்க நேரடியாக பொறுப்புக்கூறும் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டமைக்காக எவ்வித சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு உத்தியோத்தரொருவரை நியமித்து, அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் உள்ளக கணக்காய்வு உத்தியோத்தரொருவரை நியமித்து, அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |